## கவிதைப் போட்டி -12

## நாளைய தலைமுறையின் இன்றைய பங்கு(28)

முந்தைய தலைமுறை பொதுநலம் நினைத்தது
பிந்தைய தலைமுறை சுயநலம் வளர்த்தது!
இன்றைய தலைமுறை இரண்டும் கலந்தது
நாளைய தலைமுறை கேள்விக் குறியானது!

முன்னும் பின்னும் இரண்டுமே நாம் கண்டது
முள்ளும் மலரும் பாதையாய் வந்தது!
முன்னோரின் முன்னுரை பாடமாய் அமைந்தது
முதியோரின் அறிவுரை ஆற்றலை தந்தது!

விஞ்ஞான உலகில் விண்ணையே பார்த்து
கற்பனை உலகில் கனவில் மிதக்காமல்
மண்ணில் வாழ்த்திட சாதனை படைத்திட!
முன்னோக்கி வாழ முன்னேற்றம் பெறுக!

எவ்வளவு தான் மேகம் மூடினாலும்
வெளிவரும் நேரம் வரும் போது
நிச்சயம் வெளிவரும் சூரியன்
அதுபோல தான் உன்னுள் இருக்கும்
திறமையை யார் தடுத்தாலும்
உனக்குள் இருக்கும் தன்னம்பிக்கை வெற்றியை தரும்
சோர்ந்து விடாதே!

*****************